அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்

விவேக பாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை

வால்யூம்—I

செப்டம்பர் 1900—ஆகஸ்டு 1901

பத்திராதிபர்,—வள்ளிநாயக சுவாமி.

திருநெல்வேலி

தாருல் இஸ்லாம் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டு,
குற்றாலம் அகஸ்தியர் ஆசிரமத்தில்
பிரசுரிக்கப்படுகின்றது.

விஷயதானஞ் செய்துதவியோர்

பெயர்.

1 மகா-ள-ள-ஸ்ரீ T. A. கந்தசுவாமி ஐயர் அவர்கள்.
2 ,, V. O. சிதம்பரம்பிள்ளை அவர்கள்.
3 ஸ்ரீபரமஹம்ஸ சிவநாராயண சுவாமிகள்.
4 மகா-ள-ள-ஸ்ரீ S. அநவரதவிநாயகம்பிள்ளை அவர்கள் M.
5 ,, S. பழனியாண்டிமுதலியார் அவர்கள் B. A
6 ,, S. வேதமூர்த்திமுதலியார் அவர்கள் B. A.
7 ,, V. சண்முகம்பிள்ளை அவர்கள்.
8 ,, R. N. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்.
9 ,, T. சிவராமபிள்ளை அவர்கள்.
10 ,, N. சேதுராமய்யர் அவர்கள்.
11 ஸ்ரீமதி அசலாம்பிகையம்மாள் அவர்கள்
12 மகா-ள-ள-ஸ்ரீ P. ஜயராமபிள்ளை அவர்கள்.
13 ,, M. P. சுந்தரமூர்த்தியாபிள்ளை அவர்கள்.
14 ,, S. பால்வண்ணமுதலியார் அவர்கள்
15 ,, M. R. ஸ்ரீநிவாசசர்மா அவர்கள்.
16 ,, C. P. சுப்பையாபிள்ளை அவர்கள் B. A.
17 ,, C. முத்துசுவாமியாபிள்ளை அவர்கள்.
18 ,, S. R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் B. A
19 ,, V. A. நமசிவாயம்பிள்ளை அவர்கள் B. A.
20 ,, M. கிருஷ்ணசுவாமி முதலியார் அவர்கள்.
31 ,, P. M. முத்தையபிள்ளை அவர்கள்.
22 ,, O. P. உமையொருபாகம்பிள்ளை அவர்கள்.
23 ,, K. C. குப்தா அவர்கள்.
24 ,, A. S. K. ஐயர் அவர்கள்.
25 ,, A. ஸ்ரீநிவாசய்யர் அவர்கள் B. A. B. L.
26 ,, V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.
27 ,, S. K. R. சாம்பசிவ சாஸ்திரிகள்.
28 ,, S. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள்.
29 ,, வானமாமலை நரசிம்மாசாரியார் அவர்கள்.

இப்பத்திரிகையானது முதலாமாதம் ஸ்ரீ கணபதியானந்த சுவாமிகளால் கொடைபெற்றுவந்தது.

விவேகபாநு.

வால்யூம் I.

விஷயசூசிகை

விஷயம்.	பக்கம்.
அறிவு	51, 83, 141, 176.
அறிவுவிளக்கம்	90, 119, 160, 209, 254, 283.
அன்னதானம்	156.
ஆசிரியர் மாக்ஸ் முல்லர்	91.
ஆசை	184.
ஆத்மபுவனம்	20, 39.
ஆலயக்கலக நிவாரணோபதேசம்	131, 189, 233.
ஆனந்தம்	219.
இதோபதேசம்	105.
ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சருடைய உபதேச மொழிகள்	23, 38, 252.
இராமாயண கூடார்த்தம்	99.
இல்லறதர்மம்	56, 138.
இல்வாழ்வியல்	228.
ஈகை	75, 153.
உலகம் துன்பத்தில் வருந்துவானேன் ...	17.
உலகம் விரும்பேல்	179.
எங்கிருந்தெங்குவந்தேன்	214.
எல்லாம் சிவன்செயல்	5.
ஒருபதேசம்	47.
கடவுள் ஒருவரே	12[illegible]
கடவுளும் பத்தியும்	7.
கனம் மஹாதேவ கோவிந்தரானடே... ...	181.
குடியின்கேடு	115.
கூடியன் அம்மாள் சரித்திரம்	24, 43.
சத்தியம்	195.
சமதிருஷ்டி	147.
ஜடபரதர் சரித்திரம்	111, 134, 211, 260.
சிவபேர்பெற்ற நவீன சோரட்டோர் திருச்சாழல்	166, 192.
சைவசித்தாந்தம்	102, 157, 204, 231, 257.

ஜோதிடமயல் நீக்கம் ...	...	...		66, 86.
தர்மம்	...	...	...	129.
தன்னுபம் தவிர்த்தல் ...		...	...	202.
துறவு	...	...	...	267.
நடராஜபிம்பம்	...	...	...	185.
நமது பத்திரிகை	. .	...	...	171.
நல்லொழுக்கமும் மெய்யறிவும்		...	..	172.
நான் குடியிருக்கும் வீடு		...	...	34, 62.
ஞானியார்	...	...	...	123.
நிர்ப்பயம்	...	...	..	150.
பகவத்கீதை கும்மி	...	...	...	221, 243, 271.
பக்தி	...	...	...	70.
பக்தி; எதார்த்தம்:போலி		...	...	199.
பத்திரிகை	...	...	...	1.
ஸ்ரீ பரமஹம்ஸ சிவநாராயண சுவாமிகள்			...	107, 163, 207, 280.
பாசபுலம்	...	...	...	225, 278.
புத்தமதவிதிகள்	...	...	...	50.
மாணவர்பக்கம்	...	...	...	144, 167, 193, 216, 239, 264, 286.
முழுமுதற்கடவுள் கடைமுதற் றொடர் நிலை...			...	122, 142.
மோக்ஷோபாயம்	...	...	...	73.
வாழ்க்கைத்துணைவன்...		...	...	262.
விதி அல்லது ஊழ்	...	...	...	27.
விவேகவிசாரங்கள்	...	...	...	3, 31, 60, 81, 218.
வேதாந்த சித்தாந்தங்களினுண்மை		...	...	235, 247, 275.
வைராக்கியம்	...	...	...	241.

விவேகபாநு.

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகரமுதலவெழுத்தேல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு—திருக்குறள்.

வால்யூம் I] செப்டெம்பர்மீ 1-உ [புத்தகம் 1

பத்திரிகை.

உலகத்தில் மனிதராய் ஜனித்தவர்கள் செய்து முடிக்க வேண்டிய கடமைகள் பலவுளவேனும், ஒவ்வொருவரும் தத்தமாலியன்ற அளவும் பரோபகாரநிமித்தம் பிரயாசைப்படவேண்டுமென்பது ஒரு முக்கிய கடமையாயிருத்தல் யாவருக்கும் தெரிந்த விஷயம். பரோபகாரமென்றால் பிறருக்கு உதவிசெய்தல்; அஃதாவது பிறருடைய குறைகளை நீக்கி அவர்களுக்குத் திருப்தியுண்டாக்குதல். உலகத்தில் மாந்தருக்குள்ள குறைகள் பற்பலவிதமாயிருக்கின்றன. சிலர் ஆகாரமில்லாமல வருந்துகின்றனர். சிலர் கல்வியை விர்த்திபண்ணப் போதுமான பணமில்லாது துக்கப்படுகின்றனர். சிலர் வியாதிகளால் துன்பம் அடைகின்றனர். இவ்விதமான குறைகளெல்லாம் நிவிர்த்திக்கப்பட வேண்டுமென்பதே கடவுளின் கருத்து. ஆயினும் இவைகளை நிவிர்த்திக்கத்தக்க சக்திகளையெல்லாம் அவர் ஒருவரிடத்தில் மாத்திரம் கொடுத்துவிடவில்லை. ஒவ்வொருவரிடத்திலும் ஏதேனுமொன்றைப பரிகரிக்கத்தக்க சக்தியைக் கொடாதிருக்கவுமில்லை. ஆதலின் ஒவ்வொருவரும் தம் தம் சக்தியைப் பிரயோகித்து மற்றவர்களுடைய குறைகளை நீக்குவதே அவரவருடைய கடமையாகும். இது நிற்க, மேற்சொன்ன குறைகளெல்லாம ஒரு சமயம் நிவிர்த்திக்கப்படினும் பின்னொரு சமயம் வந்தடையத்தக்கனவா யிருக்கின்றன. ஏனெனில்,

"தனக்குவமையில்லாதான்றாள் சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்றலரிது"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்திருக்கின்றபடி ஜகதீசனுடைய பாதாரவிந்தங்களை யடைந்தாலொழிய கவலை நீங்குவதின்று. அவனையடையப் பெறாத குறையை உண்டுபண்ணுகின்ற ஓர்குறை மாத்திரமிடத்துளது. அக்குறையே சகல குறைகளுக்கும் காரணமாயிருக்கின்றது. அது பரிகரிக்கப்பட்டால சகல குறைகளும் நீக்கப்படுவதோடு பின்னொருக்காலும் குறைவுபடாத நித்திய திருப்தியுமடையப் படுகின்றது. அக்குறை யாதெனின் விவேகக்குறையே. அதைத் தான் அஞ்ஞானமென்றும், அவித்தையென்றும், ஜீவர்களுடைய பந்தத்துக்கேதுவான காரண சரீரமென்றும் சொல்லுவர். ஆதலின் அக்குறையை நிவிர்த்திப்பதே மேலான கடமையும் அதற்காகச் செய்யு முயற்சியே உத்தமப்பிரவிர்த்தியுமாம்.

ஆனல் அக்குறையை ஒழிக்கக்கூடியது விவேகமேயன்றி வேறொன்றன்று. அவ்வித விவேகத்தை ஜனங்களுக்குப் போதிப்பதற்கு மார்க்கங்கள் பலவுளவேனும் அவற்றுளெல்லாம் சிறந்தது பத்திரிகையே என்பது துணிவு. ஏனெனின் இது எத்திறத்தாருக்கும் பக்குவ முதலியது கவனியாமல் தூரசமீபத்தை நோக்காமல் ஞானத்தை உபதேசிக்கின்றது. ஆதலின், லௌகிகத்திற்கும் வைதிகத்திற்கும் அவசியமான ஒழுக்கங்களை யெடுத்துப் போதிக்கும் பத்திரிகை யொன்றேனும் தற்காலத்தில் பிரசுரிக்கப்பட்டு வராத நமது ஜில்லாவில் அத்தகைய பத்திரிகை யொன்று வெளிப்படுத்த அதிக விருப்பமுற்றிருந்த எமக்கு அதைக்கொண்டு முடிக்கும் சக்தி சிறிது மின்றாயினும் சில அறிஞர்கள் விஷய தானம் செய்வதாய் வாக்களித்து எமக்கு ஊக்கத்தை உண்டு பண்ணினமையின், இப்பத்திரிகையைப் பிரசுரம்செய்ய ஒருவாறு துணிந்தனம்.

இப்பத்திரிகையின் க்ஷேமத்தைக் கருதும் சில கனவான்கள் சென்ற மாசம் 18உ விடுத்த அறிவிக்கையைக் கண்ட சகல விவேகிகட்கும் இப்பத்திரிகை வெளிப்படுவதில் மிகுந்த சந்தோஷம் இருப்பதாக அறிகின்றோமாதலின் பொது ஜன நன்மையைக் கருதும் ஒவ்வொருவரும் இதனை நிலைநிறுத்தும்பொருட்டு எங்கும் இதனை விபரிக்கச்செய்து உதவிபுரிவார்களென நம்புகின்றோம். சாக்ஷாத் கடவுளும் அருள்புரிவாராக.

விஷயங்களென்னும் கிரணங்களால் அஞ்ஞானமென்னும் அந்தகாரம் துரத்தப்படுதலின் அவ்விஷயங்களையுடைய இப்பத்திரிகை ஞான சூரியன் என்னும் பொருளடங்கிய "விவேகபாநு" என்று அழைக்கப்பட்டது.

இப்பத்திரிகையில் சிரத்தை எடுக்கக்கூடிய கனவான்களென்று நாம் கேள்வியுற்ற உத்தமர்களுக்கெல்லாம் அவர்கள் அபேக்ஷயின்றியே இம்முதல் பத்திரிகை அனுப்பப்பட்டிருக்கின்றது, யாது காரணத்தினாலேனும் சந்தாத்தொகையனுப்பிய பத்திரிகை பெற்றுக்கொள்ளக் கூடாதிருக்குமாயின், அவ்விஷயத்தை அவர்கள் உடனே எமக்குத் தெரிவிக்கக்கோருகிறோம். இப்பத்திரிகை பெற்று ஒருவாரத்திற்குள் அங்ஙனம் யாரேனும் தெரிவியாதிருப்பாராயின அவர் சந்தாத்தொகையனுப்பச் சம்மதித்தவராக கருதப்பட்டு அவருக்கு மாதந்தோறும் பத்திரிகை யனுப்பப்படும்.

இப்பத்திரிகைக்கு வருஷம் 1க்குச் சந்தா ரூ.	...	1	0	0
,, ஆறுமாதத்திற்கு ,,	...	0	10	0
பத்திரிகை ஒன்றுக்கு விலை ,,	...	0	2	0

இங்ஙனம்,
பத்திராதிபர்.

விவேகவிசாரங்கள்.

புளிப்பான சுவையையுடைய மாங்காயானது முதிர்ந்தவுடன் இனிய சுவையுள்ளதாய் அது பற்றியிருந்த மரத்தின் கிளையை விட்டு நீங்குகின்றது. அதுபோல, யாவரும் வெறுக்கத்தக்க காமாதி அறுவகைத் தீக்குணங்களையுடைய மனிதன் விவேகத்தில் முதிர்ந்தவுடன * மைத்திரியாதி யினிய குணங்களுடையவனாய்த் தான் பற்றியிருந்த மாயவிருக்ஷத்தின் கிளையாகிய நகஷணையைவிட்டு நீங்குகின்றான்.

*
* *

* மைத்திரியாதி குணங்களாவன:— மைத்திரி, கருணை, முதிதம், உபேட்சை. மைத்திரி—சற்புருடர் நட்பு;
கருணை—வருந்துகின்றவரிடம் இரக்கமுறுதல்;
முதிதம்—புண்ணியர்களிடத்து வைக்கும் விருப்பம்;
உபேட்சை—விருப்பு வெறுப்பிலாதிருத்தல்.

சம்சாரம் என்னும் சாகரத்தில் விஷயம் என்னும் கல்லோடு ஆசை யென்னும் பாசத்தால் கட்டுண்டு கிடக்கும் மாந்தர், வைராக்கியமென்னும் கத்தியால் அப்பாசத்தை யறுத்து, சாதனம் என்னும் ஓடமேறி, சற்குருவென்னும் மாலுமியால் ஞானமென்னும் வழியினூடு நடத்தப்பெற்றால் மோக்ஷம் என்னும் கரையை அடைவார்கள்.

***

கெட்டவாசனையை மூடிவைத்திருந்தபோதிலும் அது வெகு தூரத்தில் சென்று பரவுகின்றது. அதுபோல, ஒருவனுடைய துஷ்கிருதியங்களை யெவ்வளவு மறைத்துவைத்திருப்பினும் அவை எங்கும்சென்று பரவும்.

***

தவளைகள் தாமரைப்புஷ்பத்தின் சமீபத்திலிருந்தாலும் அதிலொழுகும் தேனை யுண்ண அறிகிறதில்லை. எங்கேயோவுள்ள வண்டு வந்து அதை அருந்துகின்றது. அதுபோல, எத்தனை சமீபத்திலிருந்தாலும் மூடர்கள் ஞானிகளிடத்தில் அறியவேண்டியவைகளை அறிகின்றிலர். விவேகிகளோ வெகு தூரத்திலிருந்தபோதிலும் ஞானிகளை அடுத்து ஞானாமிர்தத்தைக் கிரகிக்கின்றார்கள்.

***

மழைத்துளியானது பழுக்கக்காய்ச்சின இரும்பில் விழுந்தால் காணமற் போகின்றது; தாமரையிலையில் விழுந்தால் முத்துப்போலாகின்றது; சமுத்திரத்துள்ள சிப்பியில் விழுந்தால் முத்தேயாய் விடுகின்றது. அதுபோல, குருவினாலனுக்கிரகிக்கப்பட்ட ஞானோபதேசமானது கிரகிப்பவர்களுடைய பக்குவத்துக்குத் தக்கபடி விளங்குகின்றது.

***

ஒருகுருடன் கிருமிகள்மொய்த்த மாம்பழம் ஒன்றை "மிகவும் நன்றாயிருக்கிறது" என்று புசிக்கின்றான். அப்பொழுது அவனுடைய கண்கள் பார்க்கும் சக்தியைப் பெறுமாயின் எண்ணிறந்த புழுக்கள் அப்பழத்தில் நெளிவதைக்கண்டு அருவருத்தவனாய் அதைத் தூரத்தில் எறிந்துவிடுவான். அதுபோலவே "நன்றாயிருக்கின்றது" "சுகமாயிருக்கின்றது" என்று சொல்லி உலக விஷயங்களை அனுபவிக்கும் மாந்தர்க்கு விவேகமானது திடீரென உதிக்குமாயின் அவைகளின மேலுள்ள இச்சையையொழித்து அவர்கள் தூரத்தில் விலகிவிடுவார்கள்.

கரும்பின் ருசியை யானை அறியுமேயன்றிக் கழுதை யறியாது. அது போலவே ஞானிகளின் தன்மையை விவேகிகள் அறிவார்களே யொழிய மூடர்கள் அறியார்கள்.

வள்ளிநாயகம்.

"எல்லாம் சிவன்செயல்"

ஆன்றோர்மொழியாகிய இதனைச் சிலர் தாம்செய்யும் துஷ்கிருத்தியங்களுக்குச் சமாதானமாகச் சொல்லி வருகின்றனர்.

"புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சம்
துய்க்குமிடத் தச்சந் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலு மச்சம் தருமா லெவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்."

என்றமுதமொழியையு மறந்து பரதாரத்தை விரும்பும் பாதகன் ஒருவனை "இது கொடியபாவமன்றோ? நம்மைக் கற்றவரென்றும் சொல்கின்றனரே. இங்ஙனம் செய்தல்தகுமா?" என்றொருவன் கேட்பானாயின் "நம்மால் யாது செய்தல் கூடும்? எல்லாம் சிவன்செயலன்றோ? 'அவனன்றி யோரணுவு மசையாது' என்று பெரியோர் கூறியுளது நீவிர் அறியீர்போலும்" என்று விடையளிக்கின்றான். இத்தகைய அறிவிலிகள் மலம்பொருந்திய மனத்தின் வசப்பட்டுச்செய்யும் இதுபோன்ற செயல்கள் யாவும் சிவன் செயல்களாமாயின், அவற்றை வேதம்ருதாவானவன் நிஷேதிப்பது எதன்பொருட்டு?

"நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

"பாலனாம் பருவ மாயும் பன்னிய குமார மாயும்
கோலவெள ளனமு மாயும் குலவிய நலமு மாயும்
வாலிய செல்வ மாயும வலியுட னனைத்து மாயும்
சாலவே நிலையா வதனுத் தானிலை யாமை யன்றே."

இவை போன்ற ஆன்றோர் வாக்கியங்களை யுணர்ந்துயுணர்ந்து அநித்தியமான உலக விஷயங்களில் செல்கின்ற மனதைக்கடிந்து தம்வசப்படுத்தி அதனை அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமாய் விளங்கும் சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களில் நிலைபெறச்செய்து இராகத்துவேஷ மோகபயங்களற்றவராய், பாசபந்தத்தில் நின்றும் விடுபட்டுத் தாமும் சிவத்தில் கலந்தவராய்ச் சஞ்சரிக்கும் பரமஞானிகள் தமக்கெனவோர் செயலின்றி, பரமசிவத்தின் அருள்வழி நிற்றலின், அவருடைய

கருவிகளால் செய்யப்படுவனயாவும் 'சிவன் செயலே' என்றழைக்கப்படுகின்றன. அன்னோர் பரசிவத்தின சொரூபத்தையன்றி வேறொன்றையும் இப்பிரபஞ்சத்தில் காணாராதலின் மற்றவர்களால் தன்புறுத்தப்பெறினும் அதையும் சிவன் செயலாகக் கண்டுகளிக்கின்றனர்.

மூடர்கள் இவ்வெதார்த்தத்தையுணராது தம் துர்ச்செய்கைகளை மாத்திரம் சிவன்செயல்கள் என்று மொழிந்து பிறரால் தமக்குச்செய்யப்படுவனவற்றைச்சகிக்க ஆற்றாது அவர்க்குக் கேடுவிளைக்கக் கருதி, துக்கத்தையே தமக்குப்பயனாக அடைகின்றனர். இது நிற்க, தம்மால் செய்யப்பட்ட கிருத்தியம் பலராலும் மெச்சத்தக்கதாயிருக்குமாயின் அதன்பெருமை தங்களையே அடையவேண்டுமென்பதில் அவர் கண்ணாயிருக்கின்றனர். இதனைச் சம்பந்தித்த கதை யொன்று ஞாபகத்தில் வருகின்றது. அஃதாவது:—

முன்னொரு காலத்தில் பிராமணன் ஒருவன் தன்வீட்டின் முற்றத்தில் உலரப்போட்டிருந்த தானியத்தை ஒரு பசுவானது தின்னக்கண்டு கையில் ஓர் தடிஎடுத்துவந்து தன்பலமுழுவதையுங் கூட்டி அதனை யோர் அடி அடித்தான். அவ்வடியானது பசுவின் சரீரத்தில் பிராணநிலைகளுள் ஒன்றிற்பட்டமையால் அது உடனே பூமியில் விழுந்து மடிந்தது. இதனைக்கண்ட அயலார் மிகவும் வருத்தமுற்றவராய் அப்பிராமணனை நோக்கி "என்ன பாதகம் செய்துவிட்டீர்? பசுவைக்கொன்று விட்டீரே, இங்ஙனம் செய்யலாமா? கோஹத்தி சம்பவிக்குமே" என்று வினவினர். அது கேட்டுப் பிராமணன் "யான் ஒன்றும் செய்தவனல்லன், எல்லாம் சிவன் செயலன்றோ? அதனுடைய பிராரத்தம் அவ்வளவுதான்" என்று சொல்லிவிட்டான். அயலாரெல்லாரும் "இஃதென்ன இப்பிராமணன் இங்ஙனம் உரைக்கின்றான். இவனைக் கற்றுணர்ந்தவனென்றும் அறைகின்றனரே" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு போய்விட்டனர். சிலநாட் சென்றபின் எள்ளினுள் நெய்போலும் மலரில் மணம் போலும் சர்வாந்தரியாமியாய் விளங்கும் பகவானானவர் கிருபைக்கடலாதலின் இம்மூடப்பிராமணன்மேல் இரக்கங்கொண்டு அவனுக்கு அறிவுறுத்தும் பொருட்டு ஓர் விருத்தப்பிராமண வடிவத்துடன் அம்மூடப்பிராமணன்வீட்டிற்சென்று அவனைக்கண்டார். அவன் கிழப்பிராமணனை நோக்கி "எங்கு வந்தீர்?" என்று வினவ, பகவானானவர் தாம் அடுத்த கிராமத்துக்குச் செல்லுவதாகவும் அக்கிரகத்தில் சற்றுத்தங்கி இளைப்பாறிப் போகக்கருதினதாயும் விடையளித்தனர். மூடப்பிராமணன் "அங்ஙனம் ஆகுக" என்று சொல்லி அவரோடு வார்த்தையாடிக்கொண்டிருந்தான். சம்பாஷணை முடிந்த பின்னர் பகவானானவர் அவ்வீட்டின் வேலைத்

திறமையைக்கண்டு மெச்சுபவர் போன்று நடித்து மூடப்பிராமணனை நோக்கி, "இக்கிரகம் யாரால் கட்டப்பட்டது? மிகவும் நன்றாய் அமைக்கப்பட்டிருக்கின்றதே" என்று வினவ, அவிவேக அந்தணன் "நான்தான் கட்டினேன். அப்பா காலத்தில் இது ஒரு சிறு குடிலாயிருந்தது. அதை இடித்துவிட்டு இதை நான்தான் கட்டினேன்" என்றான். அது கேட்டவுடன் பகவானனவர் புன்சிரிப்புக்கொண்டு "இக்கிரகம் மாத்திரம் நீவிர் கட்டினீர்? பசுவைக்கொன்றது சிவன்? அல்லவா?" என்று சொல்லி விட்டு மறைந்தருளினர். பிராமணன் திடுக்கிட்டு, வந்தவர் பகவானென்றுணர்ந்து, தன்னுடைய மடமைக்காக மிகவும் வருத்தமுற்று, பகவானை ஸ்தோத்திரம் செய்துவிட்டு, கோஹத்தி தோஷத்திற்கு விதிக்கப்பட்ட பிராயச்சித்தம் வழுவாது செய்துமுடித்து, அதுமுதல் சதா பகவானையே தியானஞ்செய்துகொண்டிருந்து, முடிவில் பரமகதிக்குப் பாத்திரவானுனான் என்பதே.

ஆதலின் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்று சொல்லப்பட்ட அறுவகைப் பகைவர்களாலும் செய்யப்படும் சகல கிருத்தியங்களுக்கும் உத்தரவாதி ஜீவனேயன்றிச் சிவனல்லன். மாந்தர் தம்மிடத்துள்ள குற்றங்களை நோக்கப்புகின்றி அவற்றையொழிக்க முயலாராதலின்,

"இந்தச சிவனால் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனால் வருமென்ற மூடர்கள் அதோகதி யடைவார்கள்
இந்தச் சிவனால் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனா லன்றெனும் விவேகிக ளமலனீ டடைவாரே"

என்ற முதியோர் வாக்கியத்தை நன்குணர்ந்து தம் குற்றங்களை அதிக நுட்பமாகக் கவனித்து, அவற்றை நீக்க முயல்வதுடன் பிறர் குற்றத்தை நாடாமலும், சிவபெருமான் தலையில் பழியைப்போடாமலும் இருக்கக்கடவர்.

T. A. கந்தசுவாமி ஐயர்.

கடவுளும் பக்தியும்.

1. பஞ்சபூதச்சேர்க்கையாய்க் காணப்படும் இவ்வுலகத்தின்கண் தோன்றிய எண்ணிறந்த உயிர்களையும் பிரித்துப் பார்ப்போமாயின், அவையாவும் தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, ஸ்தாவரம், என்று சொல்லப்படும் எழுவகைப்பிரிவுகளுள் அடங்குமென்பது

பிரத்தியக்ஷர். இவைகளில் ஆகாயம், வாயு, அக்னி, அப்பு, என்னும் லோகங்களாயிருக்கின்ற சித்தலோகம், கந்தர்வலோகம், தேவலோகம், பிதிர்லோகம், எனபவைகளில் வசிக்கும் சித்தர், கந்தர்வர், சூரியன் முதலிய தேவர்கள், சந்திரன் முதலிய பிதிர்கள், ஐராவதம் முதலிய மிருகங்கள், கருடன் முதலிய பக்ஷிகள், கற்பகவிருக்ஷம் முதலியதருக்கள் இவர்களை யொழித்து இப்பூலோகத்தின்கண் வாழும் அறுவகை யுயிர்களையும் ஆராய்வோமாயின் யாவற்றிலும் மனிதனே உத்தம ஜாதியென அறிவோம். எதனாலெனின் மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன இவை இகலோக புத்திமாத்திரமுடையனவாயும், விருக்ஷாதிகள் அதுகூட இல்லாதனவாயுமிருக்கின்றன. மனிதனோ இகபரமிரண்டிற்கும் அவசியமான புத்தியை உடையனாயிருக்கின்றான். இதனாலன்றோ ஔவையாரும் "அரிது அரிது மானிடராதலரிது" எனப்புகழ்ந்திருக்கின்றனர். இத்தகைய அருமையான ஜன்மம் வாய்க்கப்பெற்றும், சிலர் அதனாலடையவேண்டிய பயனைக் கனவிலும் நினையாதவராய், இவ்வண்ட சராசரங்களுக்கும் ஆதிகாரணனான ஓர் கடவுள் இல்லவே இல்லையென வாயாற்பிதற்றி, தம் வாணாட்களை வீணாட்களாகக் கழிப்பதோடுமில்லாமல், அப்பரம் பொருளினிடத்தில் விசுவாசமுடையவரை நோக்கி "கடவுள் எங்கிருக்கின்றார்? எங்கேனுமிருப்பின் அவரை யெங்களுக்குக் காட்டுங்கள். இல்லாதபொருளை நம்பி வீணாய் துக்கத்துக்காளாகின்றீர்களே" என்று உபதேசிக்கவும் ஆரம்பிக்கின்றனர். அஞ்ஞானம் என்னும் அந்தகாரத்தால் மூடப்பட்ட அத்தகைய மாந்தர் சற்று நின்று ஆலோசிப்பாராக. பொருள்களைக்காண்பது கண்ணினுடைய தொழிலன்றோ? அக்கண்ணும் இரவு இருட்டில் என்செய்யும்? ஓர் யானையின் சரீரமே யாயினும் அது பார்க்கச் சக்தியற்றதா யிருக்கிறது. சூரியனுடைய அல்லது அக்னியினுடைய ஒளி தோன்றினால் மாத்திரம் பொருள்களைக்காணும் சக்தி அதற்கு உண்டாகின்றது. இங்ஙனம் அதிஸ்தூலமாய ஒருபொருளைக் காணற்கே ஒளியை அபேக்ஷிக்கின்ற ஊனக்கண் கொண்டுதானா அவர்கள் கடவுளைக்காண விரும்புவது? என்னபேதைமை! அவருடைய புத்தியானது இவ்விதம் மழுங்கிப்போவதற்குக் காரணம் என்னென்றுரைப்பது? அவர் பூர்வ ஜன்மங்களிற் செய்தபாவத்தின் கொடுமையோ, உலகவிஷயங்களில் அவருக்குள்ள பற்றின் தடிப்போ, மாயையின் வல்லமையோ அறியேம். நிற்க, வேறு சிலர் கடவுள் இல்லையென்று சொல்ல நாவெழாதவராயிருப்பினும் "கடவுள் உண்டென்னின் காணப்படாரோ" என்னும் சந்தேகந்தங்கிய மனதுடையவராய், கடவுளுக்கு வழிபாடு செய்பவர்போன்று நடிக்கின்றனர்.

2. மனிதனுக்கு இரண்டு கண்கள் உள. அவற்றுள் ஒன்று புறத்தும் மற்றொன்று அகத்தும் உள்ளதாம். புறக்கண் ஏறக்குறைய எல்லா மாந்தரிடத்தும் உளது. அகக்கண்ணோ யாவரிடத்து மிருப்பினும் அநேகரிடத்துந் திறக்கப்படாது உறங்குகின்றது. கடவுளானவர் நித்தியராய் எங்கும் வியாபித்திருக்கின்றவராயினும் ஞானக்கண் என்று சொல்லப்படும் இவ்வகக்கண் திறக்கப்படுமளவும் மாந்தர் அவரை யுணரும் வலியற்றவராயிருக்கின்றனர். ஆதலின் தாம்குருடராயிருப்பதை மறந்து ஒருவரும் கடவுள் இல்லை யென்று சொல்லலாகாது. தக்க ஆசிரியரைப்பின்பற்றி அவ்வுண்மைப்பொருளையடைய எல்லாரும் முயலக்கடவர். சிலர் பொருள், புகழ் என்பவற்றைச் சம்பாதிப்பதற்காக ஆசிரியர்களெனப் பெயர் வகித்துக்கொண்டு சீஷர் எனத் தம் அடிகளை வணங்குபவர்க்குத் தமக்குத் தோன்றியவாறு யாதேனுமொன்றைச் சொல்லிக் காலம் கழித்து வருகின்றனர். இம்மாதிரியான குருக்களை யணுகாதிருக்க மிகவும் ஜாக்கிரதையா யிருப்பதுடன் சாஸ்திர சம்பிரதாயங்களை மாணாக்கர்களுக்குப்போதிக்கும், போதககுரு, வேதககுரு, நிசிதகுரு, காமியகுரு, சூசககுரு, வாசககுரு, காரககுரு, விகிதகுரு, என்று சொல்லப்படும் எண்வகை ஆசிரியர்களுள், வசியம், ஆகர்ஷணம் முதலிய வித்தைகளைப் போதிக்கும் நிசிதகுருவையும் சகாம உபதேசத்தால் சுவர்க்காதிகளில் சிறிது காலம் சுகமடையச்செய்து பின்னும் மனிதஜன்மம் எடுக்கும்படி செய்யும் காமியகுருவையும் நீக்கவேண்டியது. மற்ற அறுவர்களுள் போதககுரு சாஸ்திரார்த்தம் போதிக்கின்றவரும், வேதககுரு தத்துவதரிசனம் செய்விக்கின்றவரும், சூசககுரு தமது விவேகத்தினால் [1]சமம், [2]தமம், [3]விடல், [4]சகித்தல், [5]சமாதானம், [6]சிரத்தை, என்று சொல்லப்

---

[1] சமம்:—மனமானது உலகவிஷயங்களில் செல்லாமல் தடுத்தல்.

[2] தமம்:—இந்திரியங்கள் விஷயங்களில் செல்லாமல் தடுத்தல்.

[3] விடல்:—உலக விவகாரங்களைச் சுருக்குதல்.

[4] சகித்தல்:—சுக துக்கங்களை ஒன்றாய்ப்பாவித்து அனுபவித்தல்; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் இவைகளைச் சகித்த லெனவும் சொல்வர்.

[5] சமாதானம்:—குருவினிடத்தில் கேட்டபொருளில் மனதை ஏகாக்கிரப்படுத்தல். எதிலும் சஞ்சலப்படாதிருத்தல் எனவும் சொல்வர்.

[6] சிரத்தை:—குருவினிடத்திலும் சத்சாஸ்திரத்தினிடத்திலும் விசுவாசம் வைத்தல்.

பமும் அறுவகைச் சற்குணங்களையும் ஒருவகேவலச் செய்பவரும், வாசககுரு கருத்துப்பொருளை காட்டிப்பொருளாய் நின்றுள்ள விஷயவின்பத்தையும் அநித்தியமெனக்காட்டிப் பரமார்த்மாவினிடத்தில் பேரோபிரியம்வரச்செய் பவரும், காரககுரு ஜீவேசுவர ஐக்கிய ஞானம் இனைப்பித்தனைப்போதிப் பவரும், விகிதகுரு கடவுட் பேறாகிய மோக்ஷத்தையளிப்பவருமாகின்று ராதலின், மாநுடர் தத்தமக்கேற்ற குருவினிடத்திற்சென்று, அவரைச் சந்தோஷப்பித்து அவரால் உபதேசிக்கப்பட்டவழியில் நடந்து விடா முயற்சிசெய்தாலொழிய ஒப்பற்ற பரம்பொருளின் கிருபா நோக்கத்திற் குப் பாத்திரராதல் கூடாதகாரியம். "இதற்காக இத்தனைபிரயாசையேன்? கடவுளை யுணர்ந்தடையாவிடின் கெட்டுப்போவதியாது? பசிக்கு உண வில்லையா? உடுக்கவஸ்திரம் இல்லையா? பின்னேன் பார்த்துக்கொள்வோம்; இப்போது என்ன அவசரம்", என்று யாரேனும் சொல்வாராயின் அன் னோர் உண்மையறியாது சொல்கின்றனரேயன்றி வேறில்லை. எவனில் சுகமடையும் பொருட்டே சகல பிரவிர்த்திகளும செய்யப்படுகின்றன. ஒருவன் யுத்தகளத்தில், பீரங்கிகுண்டுகளின் மத்தியில் தன் உயிரை வெறுத்து நின்று யுத்தம் செய்கின்றான். மற்றொருவன் கப்பலிலேறி வாசஞ்செய்துகொண்டு சமுத்திரமெல்லாம் சுற்றுகின்றான். வேறொரு வன் ஊர் திருஷ்டிக் கண்ணாடியைக் கையிற் பிடித்துக்கொண்டு ஆகாயத் தையே பார்த்துக்கொண்டிருக்கிறான். இவையெல்லாம் இங்ஙனம் பிரயா சைப்படுவது எதற்காக? சுகமடைதற்கன்றோ? பணந்தேடற்கெனின் அ துவும் சுகத்தை முன்னிட்டன்றோ? கீர்த்திக்கெனின் அதுவும் திருப்தி யின்பொருட்டன்றோ? திருப்தியும் சுகமும் ஒன்றேயாதலின் ஜீவர்கள் பிரவிருத்திக்கிற சகல பிரவிருத்திகளும் சுகத்திற்காகவேதா னென்ப தற் கையமென்னை? கடவுள் சுகசொரூபியாயிருத்தலின் மாந்தர் கடவுள் இல்லையென்று வாயினாற்சொல்லினும் அந்தரங்கத்தில் அவரிடத்திலேயே நாட்டமுடையவரா யிருக்கின்றனர். இவ்வெதார்த்தம் அவர் உணர் கின்றிலர். திசையறி கருவியை எவ்விடத்தில் எம்முகம் நோக்கி வைப்பினும் காந்தசத்தியால் அது வடதிசையையே நோக்கி நிற்றல் போ ல மாந்தர்கள் எந்நிலையில் எவ்விடத்திருப்பினும் சுகசொரூபியாகிய கடவுளையே நோக்கியிருக்கின்றனர். ஒருக்கால் திசையறிகருவி வேறு முகமாயினும் இவர் கடவுளினின்றும் வேறுமுகமாதலில்லை. தாகத்தால் வருந்துமொருவன் ஜலத்தைப் பார்த்துக்கொண்டே யிருப்பானாயினும் அவன் தாகம் தணியுமா? தணியமாட்டாது. தாகசாந்தியுண்டாக வேண் டுமாயின் ஜலத்தைப் பானஞ்செய்தல்வேண்டும். அதுபோல கடவுளின்

சொரூபமாகின்ற சுகத்தையே மாந்தர் சதா நாடிக்கொண்டிருப்பினும் அவரது வடிவம் முழுவதும் வியாபித்து அவனையே அநுபவிக்கத் தொடங்கும்வரை மாந்தர்க்கு நித்தியசுகம் லபிக்கமாட்டாது. கடவுளானவர் சர்வ வியாபகராயும், உண்மைப்பொருளாயும், சிதானந்த சொரூபராயும், சகல தோற்றங்கட்கும் ஆதாரமானவராயும், ஆதிமத்தியாந்த ரஹிதராயும், அவிவேகிகளாற் காணப்படாதவராயும், விவேகிகளால் எளிதில் அடையப்படுபவராயும் விளங்கிக்கொண்டிருக்கிறார். அவரது சொரூபம், மெய்ம்மொழியில்

"இப்படி யிருப்ப தொன்றென் றியம்புவ தொன்ற தின்றி
யொப்புட னுணர்வு சூழ்ந்த வுணர்விறந் துணர்வா யென்றுந்
தப்பில்பே ரின்ப மாகிச் சததம் விளங்கி யெங்கு
மப்படி யிருப்ப தொன்றங் கதற்குமாஞ் சிவம தன்றே".

"எல்லாந்தா னுள்ள தாகி யெல்லாத்துக் குள்ளு மாகிச்
சொல்லாத பொருளு மாகித் தொல்லையா மெல்லை யின்றி
யல்லாத வடிவொன் றின்றி யானந்த வடிவே யாகிக்
கல்லாதோர் காட்சி யாகிக் கலந்துதா னிருந்த தன்றே".

என்று விளக்கப்பட்டிருக்கின்றது. இம்மகிமைகளால் விளங்கும் பரம்பொருளை அடைந்தாலன்றி ஜீவர்களுக்கு நித்தியானந்தப் பிராப்தி சித்திக்கமாட்டாதென்பது நிச்சயமானமையாலதான் சுருதிகள் அக்கடவுளை யடையுமார்க்கங்களையே பேசுகின்றன.

3. சுருதிகளில் கர்மம், பக்தி, ஞானம் என மூன்று மார்க்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில் காமம் இகபரமிரண்டினிலுமுள்ள விஷயங்களின் மேலெழும் இச்சையை விடுத்து நிஷ்காமியமாக வேதத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்ற யக்ஞாதிகளைச் செய்தலாம். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி, என்றுசொல்லப்படும் அஷ்டாங்கயோகங்களை அணிமாதி சித்திகளின் பொருட்டன்றிப் பழகுதலும் இதனுள் அடங்கும். அன்றியும் லாபம் நஷ்டம், வெற்றி தோல்வி, சுகம் துக்கம் முதலிய [1] துவந்துவங்களை விட்டுச் சமபுத்தியுடன் காமபலத்தில் இச்சையில்லாமல் செய்யும் சகலகர்மங்களும் இம்மார்க்கத்தில் சேர்கின்றவர் அநுசரிக்கத்தக்கவைகளாம். இந்த நிஷ்காமிய கர்மத்தினால் சித்தமானது அதிலுள்ள மலினம் நீக்கப்பட்டு ஞானப்பிரகாசத்திற்கு ஏற்றதாகச் செய்யப்படுகின்றது. அதனாலேயே இதுவும் மோக்ஷசாதனமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. சிலர் நித்

1 துவந்துவம்—இரண்டு; ஒன்றற்கொன்று தொடர்ந்திருப்பது.

திய நைமித்திக, பிராயச்சித்த கர்மங்களைச் செய்வதினாலேயே, மோக்ஷமும் அடையலாமெனக் கூறுவர். வேதத்தின் கருத்து அஃதன்று. இதனை இனிது விளக்கத்தக்க ஓர் சிறிய கதை புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:—

ஓர் காலத்தில் கைலயங்கிரியில் ஸ்ரீ பரமசிவனானவர் ஓர் அழகிய மாம்பழத்தைத் தமது திருக்கரத்தில் உடையவராய் வீற்றிருந்தார். அப்பொழுது சமீபத்தில் விளையாடிக்கொண்டிருந்த அவருடைய மூத்தகுமாரராகிய விநாயகரும் இளைய குமாரராகிய சுப்பிரமணியரும் அந்த மாங்கனியைக்கண்டு விருப்பமுற்றவர்களாய்ப் பிதாவினிடத்திற்சென்று அதைத் தங்களுக்குக் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். ஸ்ரீ பகவான் "இந்தப்பழத்தைத் தருகிறேன்; நீங்கள் இருவரும் பங்கிட்டு எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார். அதுகேட்டு இளைய குமாரர் "நன்றாயிருக்கின்றது, எனக்கு வேண்டுவதில்லை; கொடுத்தால் முழுப்பழத்தையுங்கொடுக்கவேண்டும்" என்றார். இவர் சொல்லி வாய்மூடுமுன் மூத்தகுமாரராகிய விநாயகர் "அந்த ஒரு பழத்தையும் எனக்குத்தான் கொடுக்கவேண்டும், அன்றுகூட அவனுக்கு ஓர் முழுப்பழம் தாயார்கொடுக்கவில்லையோ? பாதிப்பழம் எனக்கு வேண்டுவதில்லை" என்று சொல்லிவிட்டு வருத்தமுடையவர்போன்று ஓர் புறமாய் முகத்தைத்திருப்பிக்கொண்டு நின்றனர். இவைகளைக்கேட்ட பிதாவானவர் இவ்விருவர்களுடைய விவேகத்தையும் பரீக்ஷிக்க இது நல்ல சமயம் என்று கருதி அவ்விருவர்களையும் நோக்கி "உங்களில் யாவனொருவன் இந்த அண்டங்களை எல்லாம் சுற்றி முன்னதாக வருகின்றானோ அவனே இந்தப்பழத்தைப் புசிக்கிறதற்கு யோக்கியனாகின்றான். செல்லுங்கள் பார்ப்போம்." என்றனர். இதைக் கேட்டவுடன் சுப்பிரமணியர் நமக்கேஜயம், நமது தமையன் அவனுடைய தொந்திவயிற்றைத் தூக்கிக்கொண்டு எவ்விதம் சுற்றிவருவான், தவிரவும் அவனுடைய வாகனமும் பெருச்சாளிதானே என்று எண்ணிக் கொண்டு மனதில் சந்தோஷித்தவராய்த் தம்முடைய மயில்வாகனமீதேறி "இதோ அரைநொடியில் வந்துவிட்டேன்" என்று சொல்லிப் புறப்பட்டுப் போயினர். விநாயகரோ பிதாவைநோக்கிப் புன்சிரிப்புக்கொண்டவராய் அவரை மூன்று பிரதக்ஷணஞ் செய்துவிட்டுக் கனியைக்கொடும் என்று கேட்டனர். ஸ்ரீபரமேசுவரர் மிகுந்த சந்தோஷம் அடைந்தவராயினும் அதனை வெளியில் தோற்றச்செய்யாமல் அதிகப்பிரியத்துடன் விநாயகனை நோக்கி "அப்பா! நான் அண்டத்தைச் சுற்றி வந்தவனுக் கன்றோ இந்தப்பழம்

கொடுப்பதாகச்சொல்லியிருந்தேன். நீ என்னைப்பிரதக்ஷணம் செய்துவிட்டுக் கனியைக் கொடுக்கச் சொல்லுகின்றனையே! அஃதேன்?" என்று வினவினர். அதற்கு விநாயகமூர்த்தி "நம்மைநீர் அறியீர்போலும். அண்டசராசரங்களியாவும் நம்மையன்றி யுண்டோ? அவையாவும் நம்மிடத்திலன்றோ விளங்குவது? இவ்வுண்மையை யான் நன்றாய் அறிவேன். கனியைக்கொடும்" என்று சொன்னார். அதுகேட்ட பிதாவானவர் நன்று நன்றென்று தலையை அசைத்து மிகுந்த களிப்படைந்தவராய்ப் பாலனைத்தமது அருகிலழைத்து முத்தமிட்டுக் கனியையும் அளித்தனர். சுப்பிரமணியரும் தமது வாகனம் வாயுவேகமும் மனோவேகமும் பின்னிடும்படி அதிவேகமாய்ச் சென்றமையின் அண்டங்களையெல்லாம் க்ஷணத்திற்குள் சுற்றிமுடித்துப் பிதாவிடம் வந்தபொழுது கனியானது தன் தமையன் கையில் இருக்கக்கண்டு வருத்தமடைந்து நின்றார். பின்பு அதன் காரணத்தைப் பிதா விளக்க அறிந்துகொண்டார்.

4. கருமத்தினுல் எவ்வளவு முயன்றாலும் மோக்ஷபலம் இல்லையென்பதும் அது ஞானத்தினுல் அடையத்தக்கதென்பதும் இக்கதையில் குறிப்பித்தமை காண்க. இது நிற்க, முன் கூறிய நிஷ்காமிய கர்மம் மோக்ஷமார்க்கங்களுள் ஒன்ருயினும் மிகவும் பயப்படத்தக்கது. ஏனெனின் தன் உள்ளத்தில் இச்சை சிறிதும் இன்றென்று ஒருவன் எண்ணிக்கொண்டபோதிலும் அவன் அறியாமல் இருதயத்தில் கிஞ்சித் தங்குமாயின் அவன் கர்மத்தால் பந்திக்கப்பட்டு ஜன்மத்திற்காளாகின்ருன். மற்றைய ஞானமோ, கத்திமுனையில் நடப்பதைபோல மிக்க கடினமானதெனப் பெரியோரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விதமாகவே பகவத்கீதையில் ஸ்ரீ பகவானும் அருளிச்செய்திருக்கிருர். ஆதலின் இவ்விரண்டு மார்க்கங்களும் எல்லார்க்கும் உரியனவாகா. பின் சகலரும் கைக்கொள்ளத்தக்கதுதான் யாதோவெனின் பக்தி ஒன்றேயாம்.

5. இது லகுவானமார்க்கமாயிருத்தலாலும், ஸ்திரி, வருணம், சமயம் முதலிய பேதத்தால் நீக்கப்படவேண்டியதாகாமல் எவராலும் கைக்கொள்ளக்கூடியதாயிருத்தலாலும், யாவரும் அனுசரித்து உய்யும்பொருட்டு இதனைப்பற்றிய கிரந்தமொன்று ஸ்ரீ நாரத பகவானுலும் மற்ருென்று ஸ்ரீ சாண்டில்ய முனிவராலும் சூத்திரவடிவமாக எழுதப்பட்டிருக்கின்றது. பகவத்கீதையில் ஸ்ரீ பகவானும் பக்தர்களை வெகுவாய்ப் புகழ்ந்திருக்கின்ருர்.

6. பக்தி என்பது அன்பு, விசுவாசம் என்று பொருள்படும். அஃது இரண்டுவிதம் எனக்கூறலாம். அவையாவன:—கண்டம், அகண்டம்.

இவற்றுள் கண்ட பக்தியாவது ஏதேனுமோர் பொருளை ஈசுவரனாகப் பாவித்து அதனிடத்தில் அன்புசெய்தலாம். ஒருவன் இந்தியாவின் தென்முனையாகின்ற கன்னியாகுமரியில் நின்றும்புறப்பட்டுவடக்கே இமயகிரிக்குச் சமீபமாயுள்ள ஹரித்துவாரத்திற்கோ, வாரணாசி என்று சொல்லப்படுகிற காசிக்கோ ஈசுவர தரிசனைக்காகச் செல்கின்றான். வேறொருவன் கருடன் என்னும் பக்ஷியைப் பகவானுடைய வாகனமாகக் கருதி, சனிவாரத்தின் மாலையிலும் ஆதிவாரத்தின் காலையிலும் தரிசனம்செய்து வருகின்றான். ஒரு ஸ்திரீ அசுவத்தம் என்று சொல்லப்படும் அரசமரத்தைப் பிரதக்ஷிணம் செய்கின்றாள். பெரியபுராணத்தில் ஒரு நாயனாருடைய சரித்திரம் சொல்லப்பட்டுளது. அது வருமாறு:—சைவசமயம் எங்கும் பரவும்படி செய்துவந்த கழற்சிங்க நாயனார் என்பவர் தம்மனைவியோடு சிவஸ்தலங்கள்தோறும் சென்று சுவாமிதரிசனம்செய்து வருபவராகித் திருவாரூரையடைந்து கோயிலில் பிரவேசித்து சுவாமியை வணங்கினர். அப்பொழுது அவருடைய தேவி கோவிலை வலஞ்செய்து புஷ்பமாலை கட்டும் மண்டபத்தின் பக்கத்தில் வரும்போது அங்கு வீழ்ந்துகிடந்த மலரொன்றை யெடுத்து மோந்தனள். உடனே செருத்துணை நாயனார் என்பவர் அம்மாது இதனைப் புஷ்பமண்டபத்திலிருந்து எடுத்து மோந்தனள் என்று நினைத்து ஓடிவந்து அவளுடைய கூந்தலைப்பற்றி இழுத்துவீழ்த்தி அவள் மூக்கைக்கத்தியினால் அரிந்தார். அவள் வருத்தமுற்றுப் புலம்புகையில் சுவாமிதரிசனம்செய்து கொண்டிருந்த கழற்சிங்கநாயனார் சமீபத்தில் வந்து யாது சங்கதி யென்று வினவ, செருத்துணைநாயனார் "இவள் சுவாமிக்குச் சாற்றுதற்குரிய புஷ்பத்தை எடுத்து மோந்தமையால் யானே இங்ஙனம் செய்தேன்" என்றனர். அப்பொழுது கழற்சிங்கநாயனார் அவளை நோக்கி "புஷ்பத்தை யெடுத்த கரத்தையன்றோ முனனே தணித்தல்வேண்டும்" என்று தம்முடைய வாளையுருவிக் கையையுந்தணித்தார்.

7. இவையெல்லாம் கண்டமென்று முன்னர்க்காட்டிய பக்தியினுள் அடங்குமாயினும், அவற்றுள் மோக்ஷலாபத்தை உத்தேசித்துச் செய்யப்படுவதே எற்றமுடையாதும பக்தியென்றழைக்கத்தக்கதுமாம். இக்கண்ட பக்தியால் முற்காலத்தில் அநேக உயிர்ச்சேதங்கள் நடந்திருப்பதுந்தவிர தற்காலத்திலும் எங்கும் சண்டை சச்சரவுகளும் அபூர்வமாய் உயிர் நாசங்களும் நடந்துகொண்டேவரினும், இதுவே விசேஷ அறிவில்லாத சாதாரண மாந்தர்க்கு பின்னால் விவரிக்கப்படும் அகண்ட பக்திக்கேறும் ஓர் படியாக இருக்கின்றது.

அகண்டபக்தியாவது

"தெரிவரிய சிற்கனமாய்த் திகழ்சிவனே திலசமுகனு
மரியுடனவ் வரனுமவ னமரராதி பதியுமவன்
றுரிசறவே யக்கரமாய்ப்பரமாகுஞ் சுராட்டுமவ
னெரியுமழல் காலனவ னிந்துவொடு பிராணனவன்" என்றும்

"ஒழிந்ததொரு பொருளில்லை யுள்ளதெல்லா மவனேமுன்
கழிந்தபொருண் மேலுவ்வாக் கடவபொரு டானுமவ
மொழிந்ததனிப் பரவிச்சை [1] யவிச்சை [2] யெனு முற்றுமவ
னிழிந்தபிறப் பறவேறோர் வழியில்லை யிவனெழிய." என்றும்

பிரமகீதையிற் சொல்லியிருக்கிறபடி கருத்துப் பொருள் காட்சிப் பொருள் யாவற்றையும் அவைகட்கெல்லாம் ஆதிமூலகாரணனாயுள்ள கடவுளாகவே பாவித்து அன்பு செய்தொழுகலாம். இங்ஙனம் சகலமும் பகவத்சொரூபமாகப் பார்க்கின்ற பக்தர்கள் "அன்னிய மாக விடுதல பற்றுதலுண் டாகுமேற் "பூரண னாகப், பன்னிய பெருமைக் கானியாம்" என்று அக்கீதையே கூறுமாறு இராகத்துவேஷங்களைவிட்டு சதானந்தராய் பகவத் சந்நிதியினின்றும் விலகாதவராய் மோக்ஷ நிலத்தில் ஸ்திரமாய் வசிக்கின்றனர்.

8. ஆலவிருக்ஷமானது எத்தனையோ பெரிதா யிருப்பினும் அது முழுவதும் கடுகிலுஞ்சிறிய ஓர் வித்தினிடத்திருந்தன்றோ புறப்படுவது? அதுபோன்று, கண்டபக்தியினின்றே அகண்டபக்தியும் உண்டாகின்றது. ஒன்றுமிலாததிலிருந்து யாதும் தோன்றாதென்பது திண்ணம். ஆதலின் மாந்தரிடத்து அன்பில்லையாயின் அதை யுண்டாக்குவது அசாத்தியம்; ஆனால் அன்போ சகல மாந்தர்கட்கும் பிராணனாயிருக்கின்றது. அன்பில்லையாயின் ஒருவனும் ஜீவிக்கமாட்டான். ஒருவனுக்கு மனைவியினிடத்திலும், மற்றொருவனுக்குப் பொருளினிடத்திலும் வேறொருவனுக்குக் குழந்தையினிடத்திலும் அன்பு அல்லது பிரியம் மிகுந்திருக்கின்றது. இவர்களுள் எவனையேனும் அவன பற்றியிருக்கும் விஷயத்தின்மேலுள்ள அன்பை எடுத்துவிட ஒருவன் உபதேசிப்பானாயின் அவன் தன் அன்பைவேறொன்றின் மேல் செலுத்தப்பார்க்கின்றான். அவ்விதம் அவன் தன் அன்பிற்கேற்ற பொருள்காணானாயின் மரிப்பதே சிலாக்கியமென நினைக்கின்றான். இவ்விதமாக சகல ஜீவர்களும் எதேனுமொன்றை அன்பினால்

1. பரவிச்சை—மேலான ஞானம்.
2. அவிச்சை—அஞ்ஞானம்.

பற்றியிருத்தலினாலேயே ஜீவிக்கின்றார்கள். ஆதலின் உயிரும் அன்பும் வேறன்று. அஃதாவது ஜீவன் அன்பின் சொரூபமாகவேயிருக்கின்றான். கடவுளோ அன்பாகின்ற ஜலத்தினால் நிறைந்த சமுத்திரமாயிருக்கின்றார். ஆதலின் மாந்தர்க்கு அன்பானது எவ்வளவுக்கெவ்வளவு விரிகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கடவுட்டன்மையை அடைந்தவராகின்றனர். ஆதலின் கடவுட்பேறாகிய மோக்ஷத்திற்கு மார்க்கம் அகண்ட பக்தியாயும், அதற்கு மார்க்கம் கண்ட பக்தியாயுமிருக்கின்றது. இவ்விடத்தில் ஓர் சந்தேகம் ஜனிக்கலாம். அஃதாவது இதன் முன்பாகத்தில் கடவுளானவர் சுகசொரூபியாயிருக்கின்றாரென்றும், இப்போது அவர் அன்புவடிவமாயிருக்கின்றாரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றதென்பதே. இச்சந்தேகமானது சற்று ஊன்றியோசிக்கில் நிவர்த்தியாகத்தக்கது. எங்ஙனமெனில் அக்கினியானது உஷ்ணசொரூபமாயும் ஜோதி சொரூபமாயும் இருக்கின்றதென்றால், எவ்விதம் இரண்டும் பேதப்படாமல் ஒன்றாகவேயிருக்கிறதாகக் கிரகிக்கப்படுகிறதோ அதுபோலவே இதுவும் கிரகிக்கத்தக்கது.

9. மேற்சொல்லிய அகண்ட பக்திக்கும் ஞானத்திற்கும் பேதம் எவ்வினையோவெனின் முடிவில் இரண்டும் ஒன்றேயாம். அதனாற்றான் பக்தியும் ஞானமும் மோக்ஷநிலத்தில் சேர்க்கும் மார்க்கங்களாகச் சொல்லப்படுகின்றன. ஞானமானது கடவுளின் சொரூபத்தை விசாரித்துணர்ந்து அவனையடைதல்; பக்தியானது விசாரணையொன்றுமின்றி குருவினிடத்தில் கேட்டபடி கடவுளின் சொரூபத்தைப் பாவித்தடைதல். திருஷ்டாந்தமாக ஓர் பக்தனிடத்தில் போய் "ஜகத்தின் சொரூபம் என்ன? மாயை எப்படிப் பட்டது?" என்று இவ்விதக்கேள்விகளையொருவன் கேட்பானாயின் அவைகட்கெல்லாம் சமாதானம் அவனாற சொல்லமுடியாது. ஞானியோவெனில் அவைகளை நன்றாய் விளக்குவன். எதார்த்த பக்தனும் தேர்ந்த ஞானியும் நிலைமையில் வேறல்லர். ஆனால் மார்க்கம் மாத்திரம் வெவ்வேறு.

10. ஆதலின் இவ்வெளிதான பக்திமார்க்கத்திற் செல்ல சகலரும் முயல்வாராக. இஃது மேலான சாயுஜ்யபதவியை அளிக்கத்தக்கது.

V. O. சிதம்பரம்.

உலகம் துன்பத்தில் வருந்துவானேன்.

உலகத்தின்கண் உள்ள மதவாதிகளே, இந்துக்களே, மகமதியர்களே, கிறிஸ்தவர்களே, இன்னும் மற்றவர்களே, மதிப்பு, அவமதிப்பு, வெற்றி, தோல்வி, சுயாபிமானம், பராபிமானம் இவைகளைப்பற்றிய எண்ணங்களையொழித்து, சித்தசமாதானத்தோடும், புத்திதெளிவோடும் இம்மொழிகளைக்கேட்டு அவற்றில் உள்ள உண்மையைக் கிரகிப்பீர்களாக. நீங்கள் எதார்த்தத்தில் அறிகிறதைத் தெரியும் என்று சொல்லுங்கள். எதார்த்தத்தில் அறியாததைத்தெரியவில்லையென்று தாராளமாய் சந்தோஷத்தோடு ஒப்புக்கொள்ளுங்கள். வாஸ்தவத்தில் உணர்ந்ததை உணரவில்லையென்றும் உணராததை உணர்ந்ததாகவும் சொல்வீர்களானால் கடவுள் முன்னிலையில் நீங்கள் குற்றவாளிகளாகின்றீர்கள். சமயம் என்பது என்ன? நீவிர் ஆராதிக்கும் கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவர் எங்கேயிருக்கிறார்? அவர் தோற்றமுடையவரா? அல்லது தோற்றரகிதரா? அவர் சகலத்தையும் உட்கொண்டவரா? அல்லது எதையேனும் உட்கொள்ளாதவரா? அவர் கண்டமாயிருக்கின்றாரா? அகண்டமாயிருக்கின்றாரா? மழையின்மை, க்ஷாமம், தொத்துவியாதி, யுத்தம், ஒரு மனிதனுக்கும் மற்றொருமனிதனுக்கும் உள்ள பேதத்தாலும் சச்சரவினாலும் உண்டாகும் மற்றக்கெடுதிகள், இவைகளால் உலகம் பீடிக்கப் பட்டிருப்பானேன்? இஃது ஒருமனிதனுடைய அல்லது எல்லாமாந்தருடையவும் பாபம் அல்லது அறியாமையினாலா? இவையாவும் ஜீவர்களாலும் அவர்களுடைய செய்கைகளினாலும் உண்டாகின்றனவா? அல்லது கடவுளினாலும் சமயத்தினாலும் உண்டாகின்றனவா? இன்றேல் கடவுள் இல்லாததினால் உண்டாகின்றனவா? அன்றேல் கடவுள் இருந்து அவருடைய சக்திகள் குறைவாயிருக்கின்றனவா? அன்றேல் சத்தாய் விளங்கும் கடவுளானவர் தம்முடைய பிராணிகள் துக்கப்படுவதில் சந்தோஷித்து வாஸ்தவத்தில் குரூரசுபாவமுடையவராயிருக்கின்றாரா?

ஆயினும், "கடவுளானவர் சர்வவியாபகர், சகல சக்திகளும் அவருடையன," என்பதே நமது கொள்கையாயிருக்கின்றன. அங்ஙனமாயின், மற்றமதங்களைப் பார்க்கிலும் தம்முடைய மதமே சிலாக்கியமெனப்போதிப்பவரும், மற்றவர்களைத் தம்கூட்டத்தில் சேர்க்க எத்தனிப்பவருமாகிய தம்மில் ஒவ்வொருவரும், கடவுளானவர் எந்த ரூபத்தில் சர்வவியாபகராயிருக்கின்றார் என்றுசொல்லுங்கள். நியமத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கின் இராஜாவினால் கொடுக்கப்படும் இரக்ஷிப்பை, நியமத்தை

சந்தோஷமாயிருப்பார்கள். இது சந்தேக விபரீதங்களகன்ற உண்மையென்று அறியக்கடவீர். தொண்டமான், தோட்டி, வித்வான், மூடன், ரிஷி, முனி, முதலான சகலமாந்தர்களும் சர்வவியாபகமாய் விளங்கும் பகவானிடத்தில் சரணமடைந்து நமஸ்காரம் முதலியனசெய்து பின்வருமாறு பிரார்த்திக்கக்கடவர்:—எமது மாதா, பிதா, குரு, ஆத்மாவாயும் ஜோதிசொரூபமாயும் சர்வ வியாபகமாயும் விளங்கும் ஓ பகவானே! எங்களுடைய குற்றங்களையெல்லாம் மன்னித்தருளும். எங்களுடைய இருதயங்களிலிருந்து துவேஷம் முதலிய துர்க்குணங்களைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத்தந்தருளும். எங்களைப் பேரானந்தமாகின்ற மோக்ஷ நிலத்திலிருத்தும். நீர் எப்பேர்ப்பட்டவரென்று நாங்கள் உணரவில்லை. நீர் எங்களை இவ்வுலகத்தில் பிறப்பித்ததற்குக் காரணம் எங்களால் அறியத்தக்கதல்ல. தம்மை எவ்வித கர்மங்களால் சந்தோஷப்படுத்தலாமென்பதை நாங்கள் அறிகின்றோமில்லை. எங்கள் சொரூபத்தையே நாங்கள் அறியக்கூடாதிருக்கின்றபொழுது தம்மை யறிவதெங்ஙனம்? நீர் கிருபைகூர்ந்து எங்களுக்கு வெளிப்பட்டாலன்றி தம்மை எங்களால் அறியமுடியாது. நீர் எங்களுடைய மாதா பிதாவாயும் நாங்கள் தமது சிசுக்களாயுமிருக்கின்றோம். தம்முடைய அளவு கடந்த கருணையினால் எங்களுடைய தப்பிதங்களை மன்னித்தருளும். தம்முடைய காட்சியில் சந்தோஷகரமாய்த் தோன்றுபவைகளை நாங்கள் செய்யும் பொருட்டு எங்களுடைய இருதயங்களைத் திருப்பவும் தமக்குப் பிரியமானவைகளைச் செய்துமுடிக்க எங்களுக்குப் போதுமான பலத்தைக்கொடுக்கவும் செய்தருளும். துவேஷம், சண்டை, சச்சரவு, இவைகளை எங்களினின்றும் எடுத்துவிட்டு, சகல ஜீவர்களுக்கும் சந்தோஷம் அதிகரிக்கும் பொருட்டு எல்லாருடைய நன்மைக்காகவும் வேலைசெய்ய அன்போடுகூடின ஆவலை எங்களுடைய இருதயங்களில் நிரப்பியருளும்.

ஒவ்வொரு பட்டணத்திலும் கிராமத்திலும் நல்ல மதுரமும் வாசனையுமுள்ள பதார்த்தங்களால் அக்கினியில் ஆகுதிசெய்யுங்கள். நம்முடைய சரீரம், மனம், ரோட்டுகள், இடைவழிகள், ஆகாரம், பானம், வஸ்திரம், உபயோகிக்கிற சாமான்கள், சுருக்கிச்சொல்லின் பூமி, ஜலம், அக்கினி, காற்று, இவைகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

சர்வவியாபகமாயுள்ள பரம்பொருளை யொழித்து வேறொன்று இருந்ததுமில்லை, இருக்கிறதுமில்லை, இருப்பதுமில்லை. இஃதே உண்மைக்கெல்லாம் உண்மையானது. வேறுயாதேனுமொன்றிருக்குமாயின் அஃது எங்கிருக்கக்கூடும்? பாழ்ங்கிணற்றில் ஒளிந்திருக்கின்றதா? அவ்விதம் ஒன்றிருக்குமாயின், துக்கத்தில் வருந்தும் உலகத்தை இரக்ஷிக்க

அது என் புறப்படவில்லை? இவ்விஷயங்களைப்பற்றிய எதார்த்தத்தைக் கண்டுபிடித்துத் தீமையை நீக்குவதிலும் நன்மையை அங்கீகரிப்பதிலும் ஆவலுள்ளவர்களாயிருங்கள். ஒவ்வொரு ஜந்துவும், நமதாத்மாவினுடையவும் எல்லாருடைய ஆத்மாவினுடையவும் தோற்றமாயிருக்கின்றது. நம்முடைய நன்மையில் உலக நன்மையும், உலகநன்மையில் நம்முடையதுமிருக்கின்றன.

ஜோதியே தன் தோற்றமாகவுடைய சர்வ வியாபக பரம்பொருளுக்கு ஜெயம்கொண்டாடுங்கள். அப்பரம்பொருளேயுள்ளது. அஃதொழிந்து வேறொன்றுமின்று.

காலத்திலும் அகாலத்திலும் இங்கு சொல்லப்பட்டவைகளையே நமக்கு சொல்லிக்கொண்டிருக்கின்றேன். இன்னும் அவைகளையே சொல்லப்போகின்றேன். நான் அவ்விதம் சொல்லுவதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்? பார்க்கிறவரை நீங்கள் நம்பமாட்டீர்கள், பையன் வடிவமாகவிருந்த இராமச்சந்திரனானவர் சிவபெருமானுடைய வில்லை யொடிக்கப் புகுந்தபொழுது அவனைக்கண்டு பரிகசித்த விசுவாசமில்லாத ஜனங்களைப்போன்று நீங்களும் இப்பொழுது அறியாமையினால் உங்களுக்கு அசாத்தியம் என்றுதோன்றும் விஷயம் முற்றுப்பெறுங்காலத்து, வெட்கத்தினாலும் குழப்பத்தினாலும் உங்களுடைய தலையை மறைத்துக்கொள்வீர்கள். நமக்கு நம்பிக்கையின்றாயின் சற்றுப்பொறுத்துப்பாருங்கள். ஓம் சாந்தி.

பரசாந்தி உங்கட்கெல்லாம் பலிக்கக்கடவது.

பரமஹம்ஸ சிவநாராயண சுவாமி

ஆத்மபுவனம்.

அந்தரங்க சக்தி.

உலகமெங்கும் ஞானதீபத்தினை யேற்றி, வாழ்க்கையைக் குறித்துக் கிளைக்கும் அநேகவித அரிய ஆசங்கைகளை நிவிர்த்திசெய்து, எத்தனையோ ஜனங்களுக்கு மனச்சாந்திக்கும் தேகாரோக்கியத்திற்கு மடுத்த நன்னெறியைக் காட்டுகின்ற "நூதன உபதேசம்," "விழுமியசூழ்ச்சி" என்றும் "ஆத்ம சாஸ்திரப் பிரயோகம்" என்றும் சொல்லப்படும். அது கொள்கை மாத்திரமாயினில்லாது வாழ்க்கை விஷயங்களில் அமைக்கப்படுந் தன்மையதாயும் அவ்வாறு அமைக்கப்படும் போழ்து அற்புதமான

பயன்களைப்பயக்கும் சீர்மையதாயுமுள்ளதொரு மூலவிதியாயிருக்கின்றது. இவ்வுலகத்தில் ஏசுகிறிஸ்து என்பவருடைய உபதேசத்தால் உண்டான ஆரவாரம் வேறெதனாலும் எக்காலத்தும் உண்டானதில்லைபோலும். இதனைப்பற்றியெழுந்ததுபோல வேறெந்த உபதேசத்தைப் பற்றியும் இவ்வளவு பேதப்பட்ட அபிப்பிராயங்கள் எழுந்ததில்லைபோலும். சண்டை கிலேசங்களும் வாதாநுவாதங்களும் மதபேத வகைகளும் ஆயிரக்கணக்கான தேவாலயங்களும் ஆயிரக்கணக்கான அவருடைய உபதேசமொழிபெயர்ப்புகளும் அதிலிருந்து பிறந்திருக்கின்றன. இவையெல்லாம் மேல்நோக்கியே செலுத்துவனவாய் அப்பெரியாரது உபதேசத்தின் உயர்ந்த உண்மைகளைப் பக்குவாநுசாரம் எடுத்தெடுத்துக் காட்டிக்கொண்டு வந்தன. இதோ அதனைப்பற்றியதோர் புதிய அபிப்பிராயம்: உபதேசத்தை வாழ்க்கை விஷயங்களில் அமைத்தல் கூடும். அதனுடைய கருத்து முற்றுமாறு அதாவது அதன்மூலமாய்த் தேகசௌக்கியம் சாந்தி அழிவின்மை யென்றிவை சித்திக்கும் உண்மையைக் கண்கூடாகக் காணும்படி இப்பொழுதே இவ்விடத்தே அதனைத் தீரப்பிரயோகப்படுத்திப்பார்த்தல்வேண்டும்.

“நம்புகிறவர்களுக்கு எல்லாவிஷயங்களும் கைகூடுவனவாயிருக்கின்றன.” இவ்வுபதேசம் நிகழ்காலத்திற் கூறப்பட்டமை கவனிக்கத்தக்கது. “எல்லா விஷயங்களும்” என்பதனுள் தேக சௌக்கியமும் மனநிறைவும் மோக்ஷப்பேறும் அடங்கியிருக்கின்றன. அவை நோய் துன்பங்கட் கிடையிற் பெறப்படுவனவாய் இப்பொழுதே கைகூடுந்தன்மைய. அன்றியும், இந்திரியங்களோடியைந்து சரீரத்திலிருக்கும்பொழுது பெறப்படுவனவாய் இவ்விடத்தே கைகூடுந்தன்மைய. “திரும்பு, திரும்பு ஏன் சாகப்போகின்றாய்” என்பது முந்திப்போலன்றி நமக்குப்பிறிதோரொண்பொருளைக் காட்டுகின்றது. ஒரு பொருளில், சாதல் என்பது சந்தேகங்கள் நிரம்பி, சங்கற்பங்களால் வியசனமிகுந்து, குற்றமுடையேமென்னும் உணர்வால் அழுத்தப்பட்டு, துன்பம் சோர்வெனபன புலப்பட்டுத்தோன்ற, உயிருமுடலுங் கூடிவாழ்கின்றனவென்றுமட்டுமே சொல்லத்தக்க ஸ்திதியிலிருத்தலை யுணர்த்தும்.

அப்பெரியாரது உபதேசங்கட் கடங்கியொழுகுவதாகிய நூதன வாழ்விற் புகுந்து இச்சமைகளையெல்லாம் இப்பொழுதே களைந்து, மரணம் என்று சொல்லப்படுகிற ஸ்திதிக்கு இறுதியாகச் செலுத்தும் சோர்வுதரு காரணங்களையும் உடனே தள்ளி யுய்யவேண்டுமாயின் அவ்வண்ணம் முயல்வார்க்கெல்லாமாக ஏற்பட்டதொரு நெறியுண்டு.

நூதன சூழ்ச்சியானது மதத்தையும் கலை ஞானத்தையும் அடக்கி

நிற்பதோடு அவற்றினை யொன்று சேர்த்தலுஞ் செய்கின்றது. மனோதத்துவ சாஸ்திரத்தினால், எல்லா வியாதிகளும் முதற்கண் ஆத்மாவைப்பிடித்துப் பின்னர்ச் சரீரத்தில் உருக்கொள்ளுகின்றனவென்றறிந்தோம். இவ்வுண்மையையறிந்த நாம் முதற்கண் ஆத்மாவையும் மனத்தையும் விடுவித்து அவற்றினைச் சுத்தப்படுத்தும் மருந்தைச் சம்பாதிக்க முயல்கின்றோம். அம்மருந்து (உபாயம்) இதுவென்று தெரிந்தபின்னர், பரிசுத்தம் நம்பிக்கை சந்தோஷம்நேர்மை என்னுமியல்புகளோடுபிறக்குமெண்ணங்களால் மனத்தை நிரப்பிமருந்தினைப்பிரயோகிக்கத்தொடங்குகின்றோம்.

உலகத்தில் ஸ்தூல வியாதிகளைக் காட்டிலும் துக்கம் வருமை அஞ்ஞானம் என்பன எத்தனையோ மடங்கதிகம். ஸ்தூல நோக்கத்தோடு விஷய ஆராய்ச்சிசெய்யும் மருத்துவ சாஸ்திர பண்டிதர் மனிதனை ஸ்தூலமாகவே நோக்கி, சரீரத்தைக்கொண்டும் சரீரத்தின் வழியாகவும்சௌக்கியமுண்டுபண்ணப் பாடுபடுகின்றனர்.

சுக சௌக்கியங்கட்காகப் பிரயோகிக்கப்படும் ஆத்ம சாஸ்திரமோ ஸ்தூலமருந்து எதுவாயினுஞ் சென்றடையக்கூடாத ஸ்திதியினராகிய அதிருப்தி துக்கமென்பனவுடையார் வரையும்போய் எட்டுகின்றது. அன்றியும், "கைவிடப்பட்டவர்க"ளையும், சொஸ்தப்படுத்தலாம் என்னும் நம்பிக்கை முழுதும் போனவர்களையுந் தேடியடைந்து அகண்ட பரிபூரணராகிய கடவுளிடத்துக் குடிகொண்டிருக்கும் சன்மார்க்கம் என்னும் நன்மையில் ஆத்மாவையும் மனத்தையும் முன்னர் இயக்குவித்துப் பின்னர்ச் சாந்திவருவித்து அத்தகையோர்க்கு உயிரும் நம்பிக்கையும் உதவுகின்றது.

இன்னும் அது பொய்யொழுக்க வளர்ப்பு மாத்திரமாயிருக்கும் பொய்யியல்பினை யொழிக்கவேண்டுமென்று கற்பித்து, ஏகனும் சத்தியரூபியும் உள்ளவனுமாகிய கர்த்தன் வழியாகப்பெறப்படுகின்ற மெய்யியல்பு நன்மையே யாதல்வேண்டுமென்று அறிவுறுத்துகின்றது. அன்றியும் ஒருவன் இவ்வுண்மை வஸ்துவை யுறுதியாய்ப்பற்றி அதனையே தனது வாழ்க்கை விதியாக்குமாறு அவனுக்குத் துணைபுரிகின்றது. அஃதாவது அதனை யப்பியசித்து உண்மை மகத்துவமும் நிலைபேறுடைய ஆநந்த சௌக்கியங்களும் பெறுதலாம். இதிலிருந்து சாந்தி வல்லபம் செல்வம் என்பன புறப்படுகின்றன.

இந்த சுபாவ மாறுதலுக்காகவே நாம் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். எல்லாத் தீமைகளுக்கும் அதுவே சஞ்சீவியாம்.

"சரீரத்தின்மீது மனத்திற்குள்ள அதிகார"மே ஜடதத்துவ சாஸ்திரமென்று சொல்லப்படுங் கலையாற் போதிக்கப்படும் உண்மையாம்.—மற்றிது அமெரிக்கா கண்டத்து டாக்டர் டே என்பவரால் எழுதப்பட்ட அதி

விநோத கிரந்தத்தின் பெயராயுமமைந்தது. ஆதலால், எண்ணங்களைக் கிரமமான நெறியிற் செலுத்தினால் சரீரமும் அவற்றிற் கேற்ப நடந்து கொண்டு சத்தியம் நன்மை என்பவற்றாற்றிருந்திய நிலைமை சௌக்கியம் ஆநந்தம் என்பவற்றிற் காட்டுதல் அவசியம்.

ஒருவன், தான் கடவுளிடத்திருந்து பெற்றதாகிய அழிவு சிதைவுகளினீங்கிய பேற்றினது தூய்மையினையும் மாட்சியினையும் உணரத் தொடங்குமக்கணமே பொல்லாங்கெனப்படுவவெல்லாம் ஒன்றொன்றாய் அவனைவிட்டகல்கின்றன. தன்னுடைய ஆத்மாவின் மெய்யியல்பிதென்று நன்கு கண்டறிந்து வைத்து, தன் எண்ணங்களையெல்லாம் இம்மெய்யியல்போடு பொருத்தி நிறுத்துமாயின் அஃது அவன் செயலுணர்வுகளையேயன்றிச் சரீர கிருத்தியங்களையும் இவ்வழியிலியக்குவிக்கும்.

(இன்னும்வரும்.)

அனவரதவிநாயகம்பிள்ளை.

(இராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய)

உபதேச மொழிகள்.

1. ஜலத்தைச்சிலர் 'அக்குவா' என்றும், சிலர் 'பாணி' என்றும், சிலர் 'வாரி' என்றும், பலபெயர்களால் அழைக்கிறார்கள்; அதுபோல, ஒரே சச்சிதானந்தப் பொருளைச் சிலர் 'கடவுள்' என்றும், சிலர் 'ஹரி' என்றும், சிலர் 'அல்லா' என்றும், சிலர் 'பிரமம்' என்றும் அழைக்கிறார்கள்.

2. சர்க்கரையினால் பட்சியைப்போலும், மிருகத்தைப்போலும், மனிதனைப்போலும் பல உருவங்கள் செய்யப்பட்டிருப்பினும், அவைகளெல்லாம் சர்க்கரையேயன்றி வேறில்லை: அதுபோல், பலநாடுகளிலும் பலகாலங்களிலும் கடவுளைப் பல நாமங்களாலும், பல ரூபங்களாகவும் வணங்கினும், எங்கும் எக்காலத்தும் வணங்கப்படுகிறது பரமாத்மா ஒருவர் தான்.

3. பகவானுக்கு அநேக நாமங்கள் உண்டு; அவரை நாம் தரிசிப்பதற்கு அநேக ரூபங்கள் உண்டு. அவரை யாது பெயரால் யாது ரூபமாக அழைக்கவிரும்புகிறோமோ அந்த நாமத்திலும் அந்த ரூபத்திலும் அவரை நாம் தரிசிக்கலாமென்பது நிச்சயம்.

4. ஓர் வீட்டின் மேல் ஒருவன் ஏறவேண்டுமானால் படிக்கட்டுவழியாயும், ஏணி மூலமாயும், மூங்கில் தடியினாலும், கயிற்றைக்கொண்டும் ஏறலாம். அதேமாதிரியாகக் கடவுளை அடைவதற்கு மார்க்கங்கள் அநேகமிருக்கின்றன. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு வழியைக் காண்பிக்கிறது.

5. ஓர் ஆணியைக்கல்லின்கண் கடாவவேண்டுமோனால் அது அசாத்தியமான காரியம். பூமியிற் க்டாவவேண்டுமோனால் சாத்தியமான காரியம். அதுபோல் குருவின் உபதேசங்கள் உலக விஷயங்களில் கட்டுண்டுகிடக்கிற ஜீவர்களுடைய செவியில் பிரவேசிக்கிறதில்லை; கடவுளிடத்தில் நம்பிக்கைகொண்டவனுடைய இருதயத்தில் எளிதில் பதிகின்றன.

6. இரும்பானது கொல்லனுடைய குகையிலிருக்கும்வரை சிவப்பு நிறத்துடன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அது குகையை விட்டு வெளியில் எடுக்கப்பட்டவுடனே கரியதாயும் பிரகாசமற்றதாயுமாய் விடுகிறது. அதேமாதிரியாகத்தான் ஜீவனுமிருக்கிறான். அவன் ஆலயத்தில் அல்லது பக்தர்களுடைய கூட்டத்திலிருக்கும்போது தெய்வசிந்தனைகள் நிறைந்தவனாயிருக்கிறான். ஆனால் அவர்களைவிட்டு நீங்கினவுடனே தெய்வ சிந்தனைகளெல்லாம் ஓடிவிடுகின்றன. ஆகையால் பக்தர்களுடையவும் பரிசுத்தவான்களுடையவும் சேர்க்கையிலேயே யாவரும் வசிக்க முயல்வாராக.

S. பழனியாண்டி முதலியார், B. A.

(Life of Madame Guyon.)

கூயன் அம்மாள் சரித்திரம்.

இம்மாது (France) பிரான்ஸ் தேசத்தில், (Montargis) 'மண்டார்க்கிஸ்' என்னும் நகரத்தில் ஒருபெரிய அந்தஸ்துள்ள குடும்பத்தில் 1648ம் வருஷத்தில் பிறந்தாள். தனது பன்னிரண்டாவது வயதில் (Roman Catholic) ரோமான் கத்தோலிக் மதத்தைச் சேர்ந்த கன்னிகா மடத்தில் கல்விகற்க ஆரம்பித்தாள். அதிபால்யமானதினால் விளையாட்டுகளிலும், ஆடம்பரங்களிலும் தனது மனதைச் செலுத்தினாளேயன்றிக் கடவுளைக் கனவிலும் நினைக்கவில்லை. 1663-ம் வருஷத்தில் இந்த அம்மாள் (Paris) பாரீஸ் நகரத்தில் வசிக்கும்படி நேர்ந்தது. அங்கும் உலக விஷயங்களே அவள் மனதை அதிசமாய்க் கவர்ந்துகொண்டன. இவ்வம்மாள் அதிக அழகும், புத்திக்கூர்மையும், வார்த்தை சாதுரியமும், சமயோசித நொடிகளில் வல்லமையும், பார்த்தவர்கள் பிரமிக்கத்தக்க நடவடிக்கைகளும் பொருந்தினவளாயிருந்தமையின் பாரீஸ் (Paris) நகரத்தோர் அனைவரும் அவளை மிகவும் நேசித்துக் கொண்டாடினார்கள். அந்தம்மாள் தமது பதினாறாவது வயதில் தமக்கு இருபத்திரண்டு வயது மூத்தவராகிய "கூயன்" என்ற ஐசுவரியவானை மணம் புரிந்தனள். கூயனம்மாள் கலியாணத்திற்கு முன்னிட்டே தமது பர்த்தாவை யெப்பொழுதும் பார்

த்திராததினால் முன்னமே ஒருவரையொருவர் நேசித்திருக்க ஆஸ்பதம் இருந்ததில்லை. ஆகிலினும் அத்தம்மாளுடைய மாமியார் கொடுமையுள்ளவளாயிருந்ததினாலும் தாமும் தமது பர்த்தாவும் சந்தோஷமாய்க் கூடிவாழ்தற்கு இடமில்லாமற்போயிற்று. அம்மாமியாளோ பலவித இடைஞ்சல்களை உண்டாக்கியதுமல்லாமல் இவ்விருவருக்குள் விரோதத்தையும் உண்டாக்கிவிட்டாள். எவ்வளவோ ஐசுவரியங்களையுடையவளா யிருந்தும் கூயனம்மாள் தமது கிரகத்தையும் தமக்குச் சொந்தமெனச்சொல்ல அவரது மாமியார் இடந்தரவில்லை. வீட்டிலுள்ள இவ்வித துன்பங்களினால் கூயனம்மாள் அதிக மனக்கவலையுற்று உற்சாகமென்பதை அடியோடு இழந்துவிட்டனள். அதுகாலபரியந்தம் கடவுளைத் தியானிக்காதிருந்த குற்றத்தை நினைந்தவளாகி, அவ்வம்மாள் அதுமுதற்கொண்டு சதாகாலமும் கடவுளையே சிந்தித்து வந்தனை வழிபாடுகள் செய்துவந்தாள். அச்சமயத்தில் அவளுக்கு வைசூரிகண்டு அவளது அழகு குறைந்தது; அவளது அருமைக் குழந்தைகளில் ஒன்றும் இறந்துவிட்டது. இதற்குமேல் கூயனம்மாளை அவள் மாமியார் முன்னிலும் அதிகமாய்த் தொந்தரவு செய்யத் தொடங்கினாள். ஆனால் அந்த அம்மாளுக்குக் கடவுளினிடத்தில் உண்டான அன்பின் மிகுதியினால் இத்தகைய வருத்தங்களெல்லாம் அவள்சிந்தையில் கிஞ்சித்தேனும் பிரவேசிக்கவில்லை. அதற்குப்பின் அந்தம்மாளுடைய பர்த்தாவும் இறந்துபோயினர். கடவுளிடத்துண்டானபக்தி தினே தினே அதிகரித்துக்கொண்டே வந்தமையினால் அந்த வருத்தமும் அந்தம்மாளை அதிகமாய்ப்பாதிக்கவில்லை. இரவு பகலாய்த் தெய்வசிந்தனையே அத்தம்மாள் இதயத்தில் குடிகொண்டிருந்தது. 1681-ம் வருஷத்தில் பாரீஸ் நகரத்தைவிட்டு ஓர்மலையடிவாரத்திற் சென்று வசித்தாள். அங்கு இடைவிடாது சதாகாலமும் கடவுளைத் தியானித்ததுமல்லாமல் அவர் பேரில்அனேக பாடல்களும் பாடினாள்.

அப்பாடல்களுள் சிலவற்றின் கருத்தைத் தமிழ்ச் செய்யுட்களில் அமைத்து வரையலாயினேன்.

1. எங்கள்நா டென்பதும் எனக்கொன் றல்லவே
பொங்கிய மகிழ்தரும் புவியின் நாடெல்லாம்
திங்களோர் நாளுமே சிறந்த நாட்களாம்
எங்கணும் எம்பிரான் இருக்குந் தன்மையால்.

2. தேடிய நல்லிடத் தேனும்வெ றுத்துநாம்
ஓடிய போதினும் உயிர்க்கின் பில்லையால்
நாடிநின் றருள்செயும் நாதன் பொற்பதம்
கூடிடுந் தொறுமின்பங் கூடுங்கூடுமே.

3. உனையின்றி யோரிடம் உண்டெனி லதுகெடு
வினைபுரி பாழிட மாகிய நரகாம்
அனைவயிற் றுருகரு வாமுல குன்பால்
பிணையா னுனைப்பிரி வெங்கனம் பெரியோய்!

4. என்பதிப் பொருள் நீ! என்னுயிர்ப் பொருள் நீ!
என்கதி யாவும் நீ! என்மதி தானும் நீ!
அவனிய மாகயான் யாதுங் காண்கிலேன்
சின்மய குருவே சிந்தையுள் ளுருவே!

இவ்விதம் கூயனம்மாள் தெய்வ நினைவும் தெய்வஸ்துதியும் கைக்கொண்டவளாகி ஏழைகளுக்குப் பொருளுதவியும் நோயாளிகளுக்குவைத்தியமும் செய்துவந்தாள். தம்மிடம் வந்தவர்களுக்கெல்லாம் கடவுளைப் பற்றிபபோதித்தும் அவர்களைச் சேர்த்துக்கொண்டு கடவுள் நாமங்களைச் சொல்லிப் பஜனைசெய்தும் வந்தாள். இவ்வம்மாளுடைய பிரசங்கங்களும் கொள்கைகளும அங்குள்ள கததோலிக் மதஸ்தர்களின் கொள்கைகளுக்கு வேறுபட்டிருந்தமையால் அவர்கள் கோபமடைந்து இவளுடைய சொத்துக்களையெல்லாம் ஓர் கன்னிகாமடத்திற்குத் தானம் செய்யும்படியாக ஆஞ்ஞாபித்தார்கள். அவ்வம்மாளோ தன்சொத்துக்களை யெல்லாமேழைகளுக்கு அளிப்பதேயன்றிப் பணமிகுந்த கன்னிகா மடத்திற்குக்கொடுப்பதில்லையென்றாள். இதனால் கத்தோலிக் மதஸ்தர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து இவ்வம்மாளைத் தங்கள் தேசத்தைவிட்டு வெளியே துரத்தி விட்டார்கள். இத்தம்மாள் கிஞ்சித்தும் மனக்கவலை யடையாது, பலதேசங்களுக்குஞ்சென்று ஆங்காங்குள்ள ஜனங்களுக்கெல்லாம் கடவுளைப் பற்றியே பிரசங்கம்செய்து கொண்டிருந்து 1696 ம் வருஷத்தில் திரும்பவும் பாரீஸ் நகரத்திற்கு வந்தாள். உடனே கததோலிக் பாதிரிமார்கள் அரசனிடம் சென்று இவவம்மாள் தங்கள் மதத்திற்கு விரோதமாய் அனேக இடங்களில் பிரசங்கித்திருக்கிறளெனச் சொல்லி அரசனால் அவளைச்சிறைச்சாலையில் போடுவித்தனர்கள்.

(இன்னும் வரும்)

S. வேதமூர்த்தி முதலியார், B. A.